**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 66/2021 |
| வழக்கு சாட்சி | : | PW 5 |
| நாள் | : | 11.07.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கார்த்திகேயன் | ஜாதி | : | |
| தந்தை–கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**<u>முதல் விசாரணை</u> :**

நான் ஆட்டோ ரைவராக இருக்கிறேன். 2020ம் வருடம் 7ம் மாதம் தேதி ஞாபகமில்லை நான் சாவாரி ஏற்றிக்கொண்டு திருநின்றவூரில் உள்ள செல்வநகரில் போகும்போது அன்னம் ஸ்டோரில் அருகே கூட்டமாக இருந்தார்கள். சாவாரி விட்டுவிட்டு மீண்டும் வரும் போது அங்கு நின்று பார்த்த போது என்னை திருநின்றவூர் காவல் ஆய்வாள்ர அழைத்தார். நான் சென்றேன். எனக்கு முன்பாக ஒருவ்ர இருந்தார். அவ்ர பெய்ர சதீஷ் என்று சொன்னார்கள். பொருட்களை சில எடுக்கவேண்டும் சாட்சி கையொப்பம் போடுவீரகளா என கேட்டார்கள். நான் முடியும் என்று சொன்னேன். எங்களை வைத்து கொண்டு வரைப்படம் வரைந்தார்கள். அதற்காக என்னிடம் சாட்சியம் கேட்டார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அன்னுடைன் சேரத்து சதீஷ் குமார் கையெழுத்து போட்டார். பார்வை மகஜ்ர **அ.த.சா.ஆ.2.** ரத்த கரை படிந்த சிமன்ட் படித்த மற்றும் ரத்த கரை படியாத சிமன்ட் துண்ட் மற்றும் வெள்ளை, சிவப்பு, கருப்பு கட்டம்போட்ட ரத்த கறை படிந்த டவல் ஒன்று கைபற்றினார்கள். அதிலும் நான் சாட்சியாக கையெழுத்து போட்டேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து

என்னுடையது தான் அதிலும் சதீஷ்குமார் சாட்சி கையெழுத்து போட்டார். கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.3.** இது சம்மந்தமாக அன்றையே தேதி போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

போலிசார் விசாரித்த இடத்திற்கு ஆட்டோவில் தான் சென்றேன். காலை 6.00 முதல் 7.00 க்குள் அந்த இடத்தை நான் கடந்து சென்றேன். நான் முததில் அந்த வழியாக சென்று திரும்பி அந்த வழியாக வந்து விட்டேன். சதீஷ்குமார் இதற்கு முன்பு நான் பார்த்தது கிடையாது. அன்றைய தினம் மொத்தம் இரண்டு கையெழுத்து போட்டேன். அதில் உள்ள விபரத்தை படித்து பார்த்தேன். நான் கையெழுத்து போட்டு இருக்கும்போது சுமார் 9 முதல் 10 மணி இருக்கும் என்றால் சரிதான். நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்றாலும், என் எதிரே போலிசார் எந்த பொருளையும் எடுக்கவில்லை என்றால் அங்கே போலிசார் பொருட்களை எடுத்து வைத்திருந்தார்கள் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன்.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.